1991 சனவரி 22]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 3 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. **மணி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 5/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஊ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. **மணி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1991)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

16-50 மணி

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. மா. **சுந்தரதாஸ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களுடைய பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னால்கூட தேர்தல் நடத்தியிருக்கலாம். ஐந்தாண்டுக் காலமாக நிச்சயமாக கிராமப் புறங்களில் நிச்சயமாக வளர்ச்சி இருக்கிறது. தெரு விளக்குகள் எரிவதற்கான பணிகளை பஞ்சாயத்துத் தலைவர்கள் செய்து

---

* 21-1-1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிக மான வேலைகள் இல்லை. பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி அவர்களுடைய காலம் முடிகிறது என்று சொன்னால் அதற்கு முன்னால் தேர்தல் நடத்தியிருக்கலாம். இரண்டு ஆண்டுகள் பதவிக் காலத்தை நீட்டிக்கும் போதே இந்த அரசுக்குத் தெரியும். பிப்ரவரி மாதம் அவர்களுடைய பதவிக்காலம் முடிவடைகிற தென்பதால் சேர்மன் தேர்தலை நடத்தியிருந்தால் நிச்சயமாக மக்களுக்கு நல்ல பலன் கிடைத்திருக்கும். அதற்குப் பின்னால் ஸ்பெஷல் ஆபீசர் நியமனம் செய்வது, பில் கொண்டு வருவ தெல்லாம் சரியாக இருக்காது. நேரத்தில் இதை அரசாங்கம் செய்திருக்க முடியும். மக்களுக்காக நல்ல தொண்டு செய்கிற பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் கள், உறுப்பினர்கள் எல்லாம் நல்லவிதமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பிறகு ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டால் அவர்கள் செய்த நல்ல காரியங்களை யெல்லாம் நிச்சயமாகச் செய்யவிடமாட்டார்கள். இப்போது கூட நம்முடைய ஆட்சியில் கிராமப் புறங்களில் அரிசன மக்களுக் காக வீடுகளைக் கட்டுகிறார்கள். அவர்களுடைய பில் பொறுப்புகள் எல்லாம் பஞ்சாயத்துத் தலைவரிடம் ஒப்படைக் கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதெல்லாம் அதிகாரிகள் கையில் வந்தால் நிச்சயமாக அந்த அளவுக்குத் துரிதமாக இந்த வேலைகள் நடக்காது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, பிப்ரவரி மாதம் 27ஆம் தேதிக்குப் பின்னால் அவர்களுக்கு 'செக்'கில் கையெழுத்துப் போட அதி காரம் கிடையாது என்பதால் அந்த வேலைகளை எல்லாம் ஏப்ரல் மாதத்திற்கு முன்னால் முடிப்பதற்கான வகையில் செய்ய வேண்டும். அதேபோல இந்தத் தேர்தலை உடனடியாக வைப்பதற்கான ஏற்பாட்டையும் செய்யவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''1991ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In Clause 3, in sub clause (3) (a), after the proviso, add the following proviso:

Provided further that steps may be taken to conduct elections to the Panchayats and Panchayat Union Councils atonce to be completed on or before the 27th day of February 1991, as a first step :

Provided also that if, this step is found to be impossible, a panel of special officers may be drawn up for appointment."

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 3 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1991) * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பை வழங்கியமைக்கு, உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு இருக்கிற டாக்டர் கலைஞருடைய ஆட்சியில் இந்தச் சட்டம் திருத்தப் படுவது குறித்து பாராட்டுவதற்கும், நன்றி சொல்வதற்கும் நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

16-55 மணி.

குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் பல்வேறு நல்ல பணிகளை தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகச் செய்து வருகின்ற நேரத்தில், அந்தத் திட்டங்கள் எல்லாம் விமர்சனத்திற்கு ஆளாக் கப்படுகிறதே தவிர, பாராட்டப்படவில்லை. குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குக் கட்டிக் கொடுக்கின்ற கான்கிரீட் வீடுகளைப் பல்வேறு கோணங் களிலேயிருந்து விமர்சிப்பதற்கு அரசியல்வாதிகள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் பாராட்டுவதற்கு எதிர்க்கட்சியிலே கூட ஆள் இல்லை என்று நான் சொல்ல முடியாது, காரணம், காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள், கலைஞர் அவர்கள் கட்டித் தந்த கான்கிரீட் வீடுகளைப் பார்த்ததற்குப் பின்னாலே அவர்கள் வாயாரப் பாராட்டி, கலைஞர் அவர்களுக்கு நன்றி

* 21—1—1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.